உ

திருநெல்வேலி,

தொண்டைமான் சங்கம்.

முதல் விக்ஞாபனம்.

திருநெல்வேலி பாலிய

தொண்டைமான்கள் வேண்டுகோளின் பேரில்,

M. தொண்டைமான்,

எழுதி பதிப்பித்தது.

யூனியன் சென்ட்ரல் பிரஸ்,

திருநெல்வேலி.

1922.

[300 காப்பிகள்.

70

6-FEB

22349

திருநெல்வேலி,

தொண்டைமான சங்கத்திற்கு

பண உதவிசெய்தவர்களின் பெயர் விபரம்.

			அவர்கள்	
திருநெல்வேலி	மகா-ா-ஸ்ரீ	தொண்டைமான் பிர்ம முத்தையா	,,	1—0—0
	,,	மூ. சண்முகம்தொண்டைமான்	,,	1—0—0
	,,	வீ. சி. வன்னியப்பெருமாள்தொ	,,	0—8—0
	,,	சு. பழனிதொண்டைமான்	,,	0—8—0
	,,	பூ. பிரமுத்து தொண்டைமான்	,,	0—8—0
	,,	சு. முத்தையாதொண்டைமான்	,,	0—8—0
	,,	வ, சிங்காரவேல்தொண்டைமா	,,	0—4—0
	,,	கு. கந்தசுவாமிதொண்டைமா	,,	0—4—0
	,,	[illegible] சங்கரன் தொண்டைமான்	,,	0—4—0
	,,	சொ. சங்கரசுப்பு தொண்டை	,,	0—4—0
	,,	வீ. பி. அருணாசலம் தொண்	,,	0—4—0
பாளையங்	,,	ம. சங்கரன் தொண்டைமான்	,,	0—4—0
கோட்டை	,,	சு. கணபதிதொண்டைமான்	,,	0—4—0
	,,	பூ. சிவகுருநாதன்தொண்டை	,,	0—4—0
	,,	சி. நல்லகண்ணுதொண்டைமா	,,	0—4—0
	,,	ச. சங்கரலிங்கம்தொண்டைமா	,,	0—4—0
	,,	சு. பரதேசிதொண்டைமான்	,,	0—4—0
	,,	ச. பூலான்தொண்டைமான்	,,	0—4—0
	,,	ந. சுடலையாண்டிதொண்டைமா	,,	0—4—0
	,,	வெ, சுடலையாண்டிதொண்டை	,,	0—4—0
	,,	போ. சங்கரசுப்புதொண்டைமா	,,	0—4—0
	,,	அருணகிரி தொண்டைமான்	,,	0—8—0
	,,	பெ. சு. அருணாசலத்தொண்	,,	0—4—0
	,,	பி. சங்கரன் தொண்டைமான்	,,	0—4—0
	,,	பி. ராமையாதொண்டைமான்	,,	0—4—0
	,,	பி. பரதேசிதொண்டைமான்	,,	0—4—0
	,,	மூ. சண்முகம்தொண்டைமான்	,,	0—4—0
	,,	ஆ. முத்துதொர்ண்டைமான்	,,	0—4—0

தொண்டைமான்.

முதல் விக்ஞாபனப் பத்திரிகை.

6-FEB 1922 MADRAS

கடவுள் வணக்கம்.

1. நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீக்கச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தைசெ
(ய்வாம்

2. ஆவியேயுனை யானறிவாய் நின்று
சேவியேன் களச்சிந்தை திரைகொடேன்
பாவியேனுள பான்மையைக் கண்டு நீ
கூவியாளெனை யாட்கொண்ட கோலமே.

3. இன்று செய்வோ மிதனிற் றிருவேகம்பர்க் கெத்தனையு
நன்று செய்வோம் பணிநாளை யென்றுன்னி நெஞ்சே யுடலிற்
சென்று செயாரை விடுந்துணை நாளும் விடாதடிமை
நின்று செய்வாரவர் தங்களினீ னெறி காட்டுவமே.

4. கல்லார் சிவகதை, நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார், பசித்தவர்க் கன்னங்கொடார், குருசொன்னபடி
நில்லா ரறத்தை நினையார், நின்னும நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென், னிறந்தென், புகல்கச்சியே கம்பனே.

தொண்டைமான் குலத்தவர்களே!

நாம வாழும் இந்திய தேசமானது பண்டைக்காலந்தொட்டே மிகவும் நாகரீகம்பெற்று சீரும் சிறப்பும் பொருந்திய நாடாம். இந் நாட்டில் இயற்கையாய் அமைந்துள்ள நிலவளம், நீர்வளம், மலைவளம், மற்றெந்நாட்டினுங் கிடையா. தாவர வர்க்கங்களும் பொன் முதலிய பஞ்சலோகங்களும் பல இடங்களில் மலிந்திருந்ததினாலே இதைப் பொன் விளையும் போக பூமியென்றே பிற நாட்டாரும் கரு

தினர்கள். இங்கு பல காலங்களில் பல தேயங்களிலிருந்து பல கோடி ஜன சமூகங்கள் புகுந்து குடியேறி இந்நாட்டவர்களாகி யிருக்கிறார்கள். பிற தேச மன்னரும், அவர் குடிகளும் இந் நாட்டில் பன்முறை படை யெடுத்து இங்குள்ள நாட்டுப் பொருள்களையும், பொருளாதாரங்களையும் கவர்ந்து சென்று மேம்பாடுற்றார்கள். இந்நாட்டுப் பூர்வ குடிகளாயுள்ள இந்தியர் தினே தினே வறுமையால் மெலிந்து வாழக் காலமும் நேர்ந்தது. அம்மட்டோ! ஒருக்கால் உன்னத நாகரீக நிலையின் மகா பீடத்தையும், மனோதத்வ நிலையின் மகோன்னத கிரீடத்தையும் தரித்து மகிழ்ந் திருந்த, பாரதமக்களைத்தற்காலம் நாகரீகம் பெற்றவர்களாய் நடிக்கும் சிலர் அநாகரீகர்களென்றும், அநாதைகளென்றும் மதிக்கவும், நடத்தவும், தலைப்பட்டு விட்டார்கள். அந்தோ! நம் பூர்வநிலையையும், தற்காலம் உலக சமுதாயத்தில் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் நிலையையும் சீர்தூக்கில் பரிதாபம்! பரிதாபம்!! இவ்விதம் தாழ்ந்த நிலையில் மதிக்கும்படியாக நாம் செய்துள்ள சீர்கேடு யாது என ஆராயின், நம்நாட்டிலுள்ள பல்வேறுபட்ட ஜாதிப்பிரிவினைகளும், அச் ஜாதிகளில் அமைந்தாரின் ஒற்றுமைக்குறைவும் கல்வி, அறிவு ஒழுக்கங்களில் நாம் முன்னிருந்த நன்னிலையினின்று நழுவிய தன்மையுமே என்பது உள்ளங்கை நெல்லியங் கனிபோலாம்.

ஆயினும் சிலநாட்களாக எல்லாம் வல்ல பரம்பொருளின் கிருபாகடாட்சத்தினாலே இந்தியமக்கள் தாங்கள் முன்னிருந்த நன்னிலையை நினைத்து விழித்துக்கொண்டார்கள். அதன்பயனாக ஜாதிச்சன சமூகங்களின் ஒற்றுமைவேண்டும், ஒற்றுமைவேண்டுமென்னும் எக்காளத்தொனி சில அறிஞர்களால் செவிபட ஊதப்படுகின்றது. பெருந்துயில்கொண்ட மாசுணம்போல் இருந்தவரிதே காலங்கடத்தாதீர்கள். மலத்தில் ஜனிக்கும் புழுவுங்கூட மேன்நோக்கை கருதுகின்றனவே. விழித்திருங்கள்! விழுத்தெழுமின்கள்!! என்று பூர்வநிலையை நன்குணர்ந்த ஜனத்தலைவர்கள் ஓயாது பல இடங்களிலிருந்து கதறுகிறார்கள். இதுவன்றோ நற்காலம். கொண்டது கைவிடாக்குரங்குபோல்வதாய் கண்டது உண்டு காலங்கழிப்பதுவோ பெருமையாகும். ஜனசமூகமுற்போக்கு எங்ஙனம்

மேம்பாடு அடைய முன்செல்கின்றதோ அப்போக்கில் சென்றுலன்றோ நலம்பெறலாம். பல உறுப்புகள் அடங்கிய ஜன சமூதாய சடத்தை ஒவ்வொரு உறுப்பும் திடம்பெறச் செய்ய முயர்ச்சிக்கும் போது ஒரு உறுப்புமாத்திரம் எனக்குத் திடம்வேண்டாம், நான் முன்னிலையிலிருந்து எழ மனமில்லை என்றால் அதன்கதி என்னவாகும். பிற உறுப்புகளால் நசுக்கப்பட்டு இறந் தொழிந் தன்றோ போகநேரும். இதனையாவது உணரவேண்டாமா?

தொண்டமான் களே! உங்களுக்கோர் விஞ்ஞாபனம்! மேலே குறிப்பிட்ட பொது நோக்குக் காரியங்களில் உங்கள் நிலை எப்படியிருக்கிறது. நீங்கள் உலகத்தில் முன்னேற்றமடைய விரும்புகிறீர்களா? அன்றிக் கீழ் நோக்குடையவர்களாய்ச் செல்லுகிறீர்களா? சொல்லுங்கள். சேற்றில் ஜனித்து சேற்றிலேமடியும், கிள்ளுப்பூச்சியுங்கூட தன்னிலையிலிருந்து முன்னிலைக்குவரப் பிரயாஸசப் படுகின்றனவே, அதைப்பார்த்திருந்தால் நீங்கள் வரிதே காலம் கடத்தமாட்டீர்கள். உங்கள் பண்டைக் குலப்பெருமையையும் உங்கள் முன்னோர் இந்நாட்டில் எந்நிலையி லிருந்து வந்தார்களென்பதையும், இப்போது நீங்களிருக்கும் நிலையையும் சீர்தூக்கி ஆராய்ந்தீர்களானால், உங்களை அறியாமலே ஒரு உணர்ச்சி உண்டாகக்காண்பீர்கள். அதை ஒருவாறு சுருக்கிச் சொல்லுதும், கேட்பீர்களாக! கேட்டுப் பண்டை நிலைக்குவர முந்துங்கள்! முந்துங்கள்!! இதுவே சமயம்.

குல அபிமானிகளே! நீங்களே ஒருகாலத்தில் தொண்டுடாண்ட சித்தியர். உங்கள் குலமுதாதை ஒருவர், சேர, சோழ, பாண்டியரான மூவேந்தரோடு சமன் பெறும் நிலை பெற்றிருந்தார் அவர் சோழ வம்சக் குலக்கொடி யாயிருந்து மூவேந்தரும் மதிக்க்க்கூடிய கொடையும், திறனும் கொண்டிருந்தவரானதால் சிரோரத்தினம் போன்று விழங்கியவர். அவர் ஆண்ட நாடுதான் தொண்டை மண்டலம் என்பது. தொண்டை மண்டல வேந்தர் ஆனமைபற்றி அவருக்குத் தொண்டைமான் என்று நாமகரணஞ் சூட்டப் பெற்றது. (எப்படி பாண்டி நாடாண்டவர்க்கு பாண்டியன் என்ற பெய

ரும், சோழ நாடாண்டவர்க்குச் சோழன் என்ற பெயரும், சேர நாடாண்டவர்க்குச் சேரனென்ற பெயரும் வழங்கிவரச் சரித்திரங்களிலும், புராண இதிகாசங்களிலும் காணக் கிடக்கின்றதோ, அது போன்று, தொண்டை வேந்தர்க்கும் தொண்டைமன் என்னும் பெயர் வழங்கிவந்தது) அங்ஙனம் தொண்டை மண்டலத்தை ஸ்தாபிப்பதற்குக் காரணரா யிருந்தவரும், பல திக்கு விஜயஞ் செய்து, நீதி தவறாது செங்கோல செலுத்திய வருமாவார் ஆதொண்டைச் சக்கிரவர்த்தி, இவர் கி மு. 3-ம் நூற்றுண்டில் ஆண்டிருந்தவர் என்று சரித்திர ஆசிரியர்கள் சங்கையறசாற்றுகிறார்கள். இதை எவரும் மறுக்க முடியாதபடி பல உண்மை சரித்திர வாயிலாகவும் விரிவாய் "தோண்டைமான் மரபு விளக்கம்" என்னும் நூலில் பின்னர் எழுதுவோம். அதில் ஆதோண்டை சக்கிரவர்த்தி கிள்ளி என்னும் சோழ அரசனுக்கும் நாக கன்னிகையான காந்திமதிக்கும் ஜனித்தவர் என்றும்; சோழ தேசத்தின் வட பாகமாகிய தண்டகாரண்யம் என்னும் காட்டை வெட்டி நாடாக்கியவர் இவரோ என்றும்; அவரால் நிர்மாணிக்கப்பட்ட சிவ விஷ்ணு தேவஸ்தானங்களே தற்காலமுள்ள, தொண்டை மண்டலச் சேத்திரங்களாகிய திருப்பதி, காஞ்சி. திருவல்லிக்கேணி திருமுல்லைவாயில், மகாபலிபுரம் என்ற பிரபல நகரங்களென்றும்; தொண்டை மண்டல சைவ வேளாண் மக்களுக்குப் பிதாபோன்று நின்று பல நாடாட்சி கொடுத்து வாழ்ந்திருந்தார் என்றும்; அரிவழித்தோன்றலாய் உதித்தவரோ, பெரும்பாணாற்றுப் படை என்றும் சங்கமருவிய நூலில் வியந்து புகழப்பட்ட, இளந்திரயன் தொண்டைமன் என்றும், அவர் காலத்துச் செய்து முடித்த தானதர்ம விசேடங்களுள்; செங்கல்பட்டு ஜில்லாவில் இட்போதும் காணக்கிடைப்பதாயுள்ள திரையன் ஏரி என்ற தண்ணீர் தேக்கை நிர்மாணித்தவர் இவரோ என்றும்; அவர்பின், தொண்டை நாட்டைச் சீர்பெற ஆண்டுவந்தவர், கலம்பகம் பாடிய தம்பிக்கு நாடாட்சி கொடுத்து காஷ்டமேறிய நந்தி யெம்பெருமான் தோண்டைமான் என்றும், இவர்களின் கீர்த்திப் பிரதாபங்களை விளக்கிக் காட்டுவதாயுள்ள, பண்டை நூல்களான, பத்துப்பாட்டு, புறநானூறு, நந்திக்கலம்பகம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய அரிய பெரிய கிரந்தங்க

ளில் காணக்கிடைக்கின்றன. இம்மட்டோ! இங்ஙனம் உச்சம் பெற்றிருந்த ஆதொண்டைச் சக்கிரவர்த்தி, இளந்திரையன், நந்திபெம்பெருமான் இவர்கள் காலத்துக்குப் பின், காலவதியினாலே, சோழ அரசரால் தொண்டைநாடு கவரப்பட்டு, இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சிதறுண்டு, ஆங்காங்கு குறுகிய நாடாய் விட்டனவென்றும், அப்பொழுதும், சோழ அரசருக்கு உட்பட்டு வரன்முறை ஒழுங்கில் சமனுடையதாய், கலிங்கப்போர் வென்ற கருணாகரத்தொண்டைமான் காலத்தில் இருந்தன வென்றும், கருணாகரன் கலிங்கப் போருக்குச் சென்று சயத்தம்பம் நாட்டி, குலோத்துங்க சோழனுக்குச்சிற்றப்பன் முறையாயும், சேனை தலைவனாகவும், மந்திரத் தலைவனாகவுமிருந்தார் என்றும், கலிங்கத்துப் பரணி என்னும் நூலில், விரிவாய்க் காணப்படுகின்றது. இன்னும், சோழதேசத்திலுள்ள பல தேவஸ்தானங்களும், நகரங்களும், கோட்டை கொத்தளங்களும் கட்டி நாடாட்சி செய்தவர்கள், பல தொண்டைமான்களென்றும், அவர்களில் ஒருவரான சாமந்த நாராயண தொண்டைமான்- சாமந்த நாராயண விண்ணகரம் நிருமித்தார் என்றும்; இவர் காலத்தேதான், விஷ்ணு ஸ்தலங்களாய, திருப்பதி, காஞ்சி, வண்டலூர் முதலிய க்ஷேத்திரங்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்தனவென்றும்; சில தொண்டைமான்கள், சிவபக்தர்களாயும், சிலர் விஷ்ணு பக்தர்களாயும், நாயன்மார் களாலும், ஆழ்வாராதி களாலும், புகழப்பட்டு பாடப்பட்டிருக்கிறார் களென்றும், பல நூல்களில் காணக்கிடக்கின்றது. இதனை விரிக்கிற் பெருகும்.

சோழ அரசின் மும்முரத்தினால் காலவதியில் தொண்டைமண்டல அரசு நசுக்கப்பட்டு வலியிழந்து; அப்பப்போது வாழும் அரசர்பெருமான்களுக்கு துணைத்தலைவர்களாயும், படைத்தலைவர்களாயும்; ஆனார்கள் என்றும்; அதில் ஒருபகுதியாரோ கீழ்கரை படுத்தநாடுகளில் தங்கள் அரசர்களோடு குடியேறியிருந்தார்களென்றும், அவர்களே ஈழமுதலிய நாடுகளில் படைசென்று போர் நிறுவி சயத்தம்பம் நாட்டியவர்கள் என்றும், கீழக்கரை பட்டணமாகிய, தோண்டி (தொண்டை மருவூ) என்னும் நன்னகரை ஸ்தாபித்துக்கொண்டு, அங்கு ஆண்டுவந்தார்கள் என்றும், அக்காலத்தில்

வியாபார முற்போக்கில் தொண்டி நகரத்தார் ஐரோப்பாக்கண்டத்திலுள்ள கிரீஸ், ரோம் முதலிய நகரங்களுடன், வியாபாரஞ்செய்து வாழ்ந்தார்கள் என்றும், படைக்கலம், வியாபாரக்கலம்முதலிய கப்பல்நிர்மாணஞ் செய்து மிகச்செல்வம் படைத்தவர்களில் முதலாவார் தொண்டைமன்னரும் அவர் தம் குடிகளேயாமென்றும், பலதிருஷ்டாந்தங்களால் நிர்மாணிக்க கூடியதாகிறது.

பின்னர் காலவரையில் உள்நாட்டில் கீழ் நெல்லிக்கோட்டையைக் கட்டிக்கொண்டு பல தலை முறையாகத் தொண்டைமான்கள் தங்கள் பூர்வ சமுதாயப்படி ஆண்டுவந்தார்களென்றும், கர்நாடகநவாப்காலத்திலும், திருமலைநாயக்கர்காலத்திலும், சிலதொண்டைமான்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்தார்களென்றும், ஆங்கிலேயர் தென்னாட்டை படையெடுத்தகாலத்திலும், ஹைதர் அலிக்கு விரோதமாய் ஆங்கிலேயருக்கு உதவி நின்று சமர்புரிந்து வெற்றிக் கொடிநாட்டியவர்கள் தென்னாட்டுத்தொண்டைவேந்தர் என்றும், புதுக்கோட்டை சமஸ்தான சரித்திரவாயிலாக கரதலாகமலம்போல் காணநேருகின்றது. அதனாலேயே இன்றும், ஆங்கிலமன்னர் புதுக்கோட்டை சமஸ்தானத்தையும், அதைச்சேர்ந்த பன் நாடுகளையும் தொண்டைமான் அரசருக்கு உரிமைகொடுத்து, தம் வலங்கை போல மதித்துவருகிறார்கள். இங்கு ஆண்டிருந்த 36 தலைமுறைவரையுள்ள அரசர்களின் தீர வீரச்செயல்களையும், "இயன்மொழி வாழ்த்து" என்னும் நூலில் நன்குகாட்டப்பட்டிருக்கின்றது.

அப்படி தென்னாடாண்ட தொண்டைவேந்தர்களான இராமலிங்க மகாராஜா, வீரியமகாராஜா முதலியோர் க்ஷேத்திரவாசமாக, தென்காசி, குற்றாலம், பாபவிநாசம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு வந்திருந்தார்களென்றும், அங்கங்கும் பல தர்மஸ்தாபனங்களும், நிர்மாணித்து தங்கள் வம்சஸ்தரான சிலரை அங்கங்கு குடியேற்றிப் போயினார்களென்றும், அவர்களின்வழியடியாராயே இப்போது திருநெல்வேலி ஜில்லாவில்காணப்படுகிற தொண்டமான்களாகிய நாம், இருந்துவருகிறோமென்பதும், விரிவாய் எவரும் ஒப்ப பல தாட்டாந்தங்களோடு நிரூபிக்க பலநாட்செல்லுமாதலால், ஒருசிறிது உரைத்தோம். எல்லாம்

வல்ல எம்பெருமானின் திருவருளும், உங்களுடைய ஜன சமுதாய ஒற்றுமையும், கைகூடுமானால், கூடியசீக்கிரம் வெளிப்படுத்த எண்ணுகிறோம். தொண்டைமான்களெனத் தங்களைச் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவிபுரிந்து தங்கள்குலப் பெருமைக்கு ஆஸ்பதமான தொண்டைமான் மரபுவிளக்கம்என்னும் இந்நூலை சீக்கிரம் அச்சியற்றும்செய்வீர்களானால் நலமாயிருக்கும். "எறும்பும் தன்கையால்எண்சாண்" என்பது பழமொழி இதுநிற்க.

இனி தொண்டைமான் ஜன சமுதாயமானது பூர்வமிருந்த நன்னிலையை நினைத்துக்கொண்டு மகிமைபேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? அரசன் மகன் அரசனாயில்லாவிட்டாலும், வித்வான் மகன் வித்வானாயில்லா விட்டாலும் எவ்வளவு அவமானமோ அவ்வளவு ஆகுமல்லவா? தொண்டமான்களே! எழுந்திருங்கள்! இந்நிலஉலகத்தில் மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் தினே தினே அறிவிலும், நாகரீகத்திலும், ஒழுக்கத்திலும் மேன்பாடடைந்து வருகிறார்கள். அதன் முதிர்ச்சியாகவே நம் இந்தியாவில் பலபாகங்களில் பலவருணத்தார் தம் தம் ஜன ஒற்மைமையை நிலைக்கச்செய்ய வேண்டுமென்று பெருமுயற்சி செய்கிறார்கள். இது நடக்கிறதென்பதற்கு நிதரிசனமாக அநேகஜாதிச் சங்கங்கள் ஸ்தாபகமாயிருப்பதும், அவரவரும் நான் மேல், நீ மேல், என்று போட்டிபோட்டுக்கொண்டு முற்போவதும். பத்திரிகைவாயிலாகக்காணநேருகின்றது. கடவுள்சிருஷ்டியில், ஒருஜாதிமேலென்றுவது கீழென்றுவதுகிடையாது. அவரவரும் வீணே தற்பெருமையாகத்தான் ஜாதிச்சண்டை போட்டுக்கொள்கின்றார்கள்; என்றாலும் அதிலும் ஓர்நன்மைவிளைகிறது. ஏதெனின், ஒருதொழிலைக்கைக்கொண்டவர்களான ஒருஜாதியார் தங்களுக்குள் ஒற்றுமையையும், கல்வி, அறிவு, ஒழுக்கங்களையும், விர்த்திக் கொண்டுவரவேண்டுவதான நன்னோக்கில் செல்லுகின்றார்கள். அதன்விமரிசைகள் அச்சங்கங்களால் விளையும் பயனுமாகிறது. இந்தியாவோ பலதிரப்பட்ட ஜாதிப்பிரிவினையுள்ள நாடு. ஒவ்வொரு ஜாதியாரும் ஜனசமுதர்யமுற்போக்கில்சென்றால் தான் நன்மையுண்டாம். ஆனால். சில ஜாதியினர் முற்செல்ல சிலர் பின்னடைவார்களானால் காலாவதியில் பிற்பட்ட சமுதாயத்தார் நசுக்குண்டு ஒழிந்துபோவாரென்பது திண்ணமல்லவா?

நமது காருண்ய கவர்ண்மெண்டார் எந்தஜாதியானது கல்வி அறிவிலும், செல்வச்செழிப்பிலும், கடைபட்டிருக்கிறதோ, அதனை கைதூக்கிவிட முன்வந்திருக்கிறார்கள். இதனாலேயே நமக்கும் நற்காலம்பிறந் திருக்கிறதென்பதும்; நாமும் நம்மாலியன்றவரை ஒத்துழைத்து மேன்பாடடையவேண்டியதும் நம் குல அபிமானிகளின் ஒவ்வொருவரின் கடமையாகிறது. அதனாலே இச்சமயத்தை கைசோரவிடுவோமானால் நம்மிலும் கடையானசிலர் முன் போகவும் நாம் தற்போது இருக்கும் நிலையிலும் தாழ்மையடையவும் நேரும். இதுமுக்காலு முண்மை. ஆகையால் உங்கள் பெருந்தூக்கத்தினின்று விழித்தெழுமின்கள். "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" காலங்கடத்தாதீர்கள்,

அதனால்; தோண்டமான் குலாபிமானிகளே! உங்களுக்குள்ளிருக்கும் அற்ப சண்டை சச்சரவுகளை ஒழித்துவிட்டு "ஊரேங்கும்வாழக் கேடேரன்று மில்லை" என்ற நன்மொழியைக் கடைபிடித்து, உங்கள் ஜனசமூகம் ஒன்றுபட்டு ஏகமனதாய், மேன்மையடையப்பாருங்கள். அப்போதே உங்கள் பண்டைகுலப்பெருமையை நாட்டும் தீரர்களாவீர்கள்; நாமெல்லாம் ஆதிபிதாவான ஆதொண்டை சக்ரவர்த்தியின் புத்திரர்களல்லவா? ஓரேகுலத்தில் ஜனித்தவர்களெல்லாம், ஒரே இரத்தக் கலப்புள்ளவர்களல்லவா? இதில் சிலர்வாழவும், சிலர் நையவுமானால் தங்கள் குலப்பெருமைக் கன்றோகுறைவாகிறது. ஓர்குடும்பத்தில் ஜனித்த சகோதரர்களாகிய நீங்கள் சண்டைபோட்டுக்கொண்டு அவரவரும் தன்காரியபாயே காலம் கழிப்பீர்களானால் பிறர் உங்கள் ஒற்றுமைக் குறைவைக் கண்டுபரிகசிக்க வன்றோ நேரும். இதனை ஓர்ந்துபாருங்கள் "முயற்சிதிருவினையாக்கும்" என்னும் நல்லுரையை உங்கள் தினப்பாடமாகப்படியுங்கள்.

நீங்கள் உலகமுற்போக்கில் மேம்பாடடையவேண்டுமோனால், எக்காரியங்களையும், எவ்வழிகளையும், நாகரீகம்பெற்ற ஜாதியார் அநுட்டிக்கிறார்களோ அதைக்கையாழவேண்டும். அப்படி அநுட்டித்து எப்போதும் உங்கள் முன்னோக்கிலேயே லட்சியம்

வைக்கவேண்டும். இடையில் அநேக தவறுதல்கள் நேர்ந்தாலும் நேரலாம். அவைகளை மேற்கொண்டு செல்லல்வேண்டும். ஒரு ஜன சமூகம் மேன்மையடைந்திருப்பது எப்படி அறியலாமென்றால் அதில் பலர் அறிஞர்களாகவும், செல்வவான்களாகவு மிருப்பதினு லேயாம். அதனால் நாமும் அறிஞர்களாகவும், செல்வவான்களாக வும் ஆவதற்கு வழிகள் எது, எது என்று உணரவேண்டாமா?

உலக காலசக்கரத்தில் ஒருகால் மேன்பாடுற்றிருந்தவர் கள் கேவலநிலையை அடைவதும், கீழ்மக்களாய் அநாகரீகர்களா யிருந்தவர்கள், தங்கள் ஒழுக்கங்களாலும் நன்னடக்கைகளாலும், கல்வி கேள்விகளாலும் மேலவராவதும் சகஜமே, எனினும் ஒருக் கால் நாகரீக நிலையில் நின்றவர்கள், வழுக்கிவீழ்ந்து கீழ்மக்களாய் கேவலஸ்தர்களாவது அம்மக்களின் அறியாமையையும், ஒழுக்க ஹீனத்தையுமே ஆதாரமாக்கொண்டுள்ளதென்பது எவரும் மறுக்க முடியாது. ஒரு ஜனசமூகம் காலத்தியற்கைக்கு மாறுபடாமல் எக்தெந்த முற்போக்கில் செல்லத்துணைநிற்குமோ அவ்வழிகளைப் பின்பற்றி நடக்குமானால் அதால் யாதொருகேடும் விளைவதில். இதனையே, "பழையன கழிதலும் புதியனபுகுதலும் வழுவல காலவகையினானே" என்றார் பவணந்தி முனிவரும். ஆனதுபற்றி நாம் நம் குலப்பெருமையை யாயினும் சிறுமையையாயினும், வீண் பேச்சுகளால் பேசிமகிழவோ, மயங்கவோசெய்யாது விரைந்து எக்தெந்த நற்குணங்கள், நல்லொழுக்கங்கள், நன்னடக்கைகள், முதலியவைகளைப் பின்பற்றினால் நம் ஜனசமூகம் ஒற்மைப்படும்; உயர்வாய் எண்ணப்படும் என்பதை தீரயோஜித்து ஒரேமனதாய் அக்கைங்கிரியங்களை கையாழவேண்டும். அன்றே நமக்கு சுதினம். அன்றே நம்வாழ்நாளின் திருநாள். ஆனதால், தோண்டமான்குலத் தவர்களே! கீழே குறிப்பிடும் சிலவற்றை உங்கள் மனதுக்குப் பொ ருத்தமாயின் ஓம் என ஒப்பி கையாழமுன்வாருங்கள். அன்றே நீங்கள் அந்தகாரத்திடைநின்று அருள் சோதியைப் பெறுவீர்கள். இன்றேல் உங்கள் கதிக்கு நீங்களே பகைவராயிருந்து, மிதியுண்ட மலர்போலும் குப்பைக்குழியில் எறியப்படுவீர்கள். ஓருங்கள், உணருங்கள், ஓர்ந்து உணர்ந்து உய்மின்கள்.

தொண்டமான் குல சிரேஷ்டரே! நீங்கள்தான், உங்கள் நாட்டு சமுதாயத்தாரின் பொறுப்பாளிகள். நீங்கள் நல்வழியில் நடந்தால்தான் உங்களைச் சுற்றியுள்ள மற்றையோரும் நல்வழி பிடிப்பாகள். உங்களில், சிலராவது, நம் ஜாதியின் நற்கைங்கிரியத்திற்கு உழைப்போம் என்றுமுன்வரவேண்டும். சாந்தம் என்னும் கங்கணம் கட்டிக்கொண்டுஇரவுபகலாய் உழைக்கவேண்டும். உங்களுக்குள்ள, நான்பெரியவன், அவன் சிறியவன் என்னும் அகங்காரமமகாரங்களை ஒழிக்கவேண்டும்.

"யார் பெரியர் யார்சிறியர் யாருறவர் யார் பகைஞர்
சீர்பெரியர் ஆனந்த சிற்சொருபர்—பேர்பெரியர்
எக்கெங்குந் தாமா யிருந்துசட சித்தனைத்தும்
அங்கங் கியற்றுவதாலுல்"

"என்ற பெரியோர்வாக்கை கவனித்தீர்களானல் உங்களில் ஒருவரும் பெரியருமல்லர் ஒருவரும் சிறியருமல்லர், எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றே பெரியதிற் பெரியதும்,சிறியதிற் சிறியதுமாய் நிற்கிறது. ஆனதால், நீங்கள் எல்லாரும் இன்றுமுதல் பொது ஜன சமுதாய முற்போக்கில் புத்தியைச்செலுத்தி "கூடி வினைசெயக் கோலமாகிடுமே" என்னும் முதுமொழியைப் பேணுங்கள். உங்களுக்கு மகா புண்ணியமும் புகழுமுண்டாகும். உங்கள் குலக் கொடிகள் பெரிதும் பெருகிவாழ்வார்கள்

பொதுநோக்கம். நாட்டு ஒற்றுமை.

நமது குலத்தவர்கள் இந்த ஜில்லாவில் எந்தெந்த நகரங்களில் கிராமங்களி லிருக்கிறார்களோ, அவர்கள் பூராவுஞ்சேர்ந்த நாட்டுச்சங்கம் ஒன்று ஏற்படவேண்டும். அந்தந்த தாலூகாக்களையும், அதன் கிராமங்களையும், மொத்தத்தில 4 பிரிவாகப்பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தகுதியான இடத்தை தலைநகர் ஆக்கவேண்டும். அங்குள்ள தொண்டைமான்கள் பலருக்கும், பிரதிநிதியாக அத்தலைநகரிலும் அதனையடுத்த கிராமங்களிலுமாக விருந்து 12 பிரமுகர்கள் ஒவ்வோர் தலைக்கட்டு வரி செலுத்துபவர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இப்பன்னிருவரோ அந்நாட்டு வட்டத்துக்குள் ஏற்படும் சகல வியவகாரங்கள், சண்டை சச்சரவுகள், நன்மையான விஷயம் தின்மையான விஷயங்களில் எதைதை எப்படி அநுட்டிக்கவேண்டுமோ, அப்படி நடத்திக்காட்டவேண்

 Y562.1.2 N22

டும். வருஷாவாரி தலைக்கட்டுக்கு ஒரு வரி ஏற்படுத்தியும், அந்தவரி
யைக்கொண்டு எதெது அவசியச்செலவுகளென்று குறைந்தபக்ஷம்
7 பிரமுகர்கள் அபிப்பிராயப்படுகிறார்களோ, அவர்கள் இஷ்டம்
போல் செலவுசெய்யவேண்டும். அந்தநாட்டு வட்டத்திலிருந்து
நாட்டு ஒற்றுமை சங்கத்தின் பொதுநிதிக்காக பெரும்பணத்தை
மீத்து வைக்கவேண்டும். நாட்டுவட்டப்பணத்திலிருந்து நமது குல
த்து சிறுவர்கள், சிறுமிகள் இவர்களுக்கு கல்விசற்பிக்கவும், தே
வார திருவாசக மதசம்பந்தமானவும், ஒழுக்கசம்பந்தமானவும் நூல்
கள் கற்பிக்கவும்; ஆசார அநுஷ்டானங்களை சிறுவர்கள் சரியாய்
செய்துவரவும்; இன்னும் நன்மையானவைகளை நடத்திக் கொள்
ளவும் உபயோகிக்கவேண்டும். கூடுமானால் ஒவ்வொருவட்டத்து
க்குள்ளும் பலபள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து, சிறுவர் சிறுமிகள்
கற்கும்படி கட்டாயப்படுத்தவேண்டும். "கல்லா ஒருவன் குலநல
ம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே" என்னும் பெரியோர்
சொல்லியிருப்பதால் நம்குலமக்களும் கல்வியில்லா மூடராயிருந்தா
ல் உலக சமுதாயத்தில் யாதொருவிதமான கீர்த்தியையும் அடைய
இயலாது. ஆனதால் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"
,,கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே'
என்ற நல்வாக்குகளை நாம் பேணத்தக்க ஏற்பாடு செய்யவேண்
டும். வருஷாவாரியோ, அன்றி இரண்டுவருஷத்திற்கு ஒருமுறை
யோ நம் ஜாதியார் ஒன்றுசேர்ந்த மகாநாடு கூட்டப்பெற்று, அம்
மகாநாட்டில் நமது குலவிருத்திக்கு சாதகமான விஷயங்களை
விசாரணைசெய்து அநுட்டிக்கத்தக்க வழிகள் தேடவேண்டும். முக்
கியமாய் பிரபலநகர்களில், வாசகசாலை ஒன்று ஏற்படுத்தி சமாச்சா
ரபத்திரிகைகள், மதசம்பந்தமானவும், ஒழுக்கசம்பந்தமானவுமான
நூல்களை, ஓய்ந்த நேரங்களில் வாசித்துவர ஓர்தனியிடமும் அதற்
கு வேண்டிய சாதனங்களும் அமைக்கப்படவேண்டும். அநாவசி
யமாய் பிறஜாதியாரோடு சண்டைசச்சரவுகள், கூட்டுறவுகள் வை
த்து அதினால் வருங்கேட்டையும், லாபத்தையும் ஒழிக்கப்பார்ப்ப
தேமேலாக்கவேண்டும். வீணாய் சிறுவர் சிறுமிகளாகட்டும், பெரிய
வர்களாகட்டும், அசங்கியபேச்சுகள், அநாவசிய நடவடிக்கைகளில்
பழகாதிருக்க வழிதேடவேண்டும். இன்னும் பலநன்மையானவும்

223481

நாகரீகமானவும், ஜாதி ஒற்றுமைக்கானவுமான விஷயங்களை கல்வி வல்ல பிரமுகர்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து எது நலம் என்று படுகிறதோ அதை அநுட்டிக்க ஒவ்வொருவரும் கட்டுப்படவேண்டும். அப்போதுதான் எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளும் கைகூடும். முயற்சி திருவினையாக்கு மென்பதும், நாம் முன்னிருந்த நன்னிலைக்கு வருவோமென்பதும் திண்ணம்.

நமது ஜாதியாரின் முன்னேற்றத்தையும் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்குகளையும் அடுத்தடுத்து எடுத்துக்காட்ட கருவியாக, 'தோண்டைமான்'' என்ற ஒரு மாதாந்தப்பத்திரிகை நம்குலத்தவர்களுள் பரவவேண்டும். சுமார் 300 காப்பிகள் மாதாமாதம் அச்சடித்து பல ஊர்களுக்கும் அனுப்புவதானால் வருஷம் ஒன்றுக்கு ரூ. 400, வரை செலவாகிறது. அதோடு, முன் குறிப்பிடப்பட்ட தொண்டைமான் மரபு விளக்கம் என்னும் நூலும் கூடியசீக்கிரம் அச்சாகப் பிரயாசைப்படவேண்டும். நமது ஜாதியாரின் முன்னேற்றத்தில் லட்சியமுள்ள தொண்டைமான் குலத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவி செய்து, மேற்கண்ட இரண்டு கைங்கரியங்களையும் பூர்த்திபண்ணவேண்டும். நமது சமுதாயத்தாரில் அறிவாளிகளான சிலராவது முன்வந்து, நமது குலக்கேட்டை உன்னி தக்க உழைப்பெடுத்து, நீக்கப்பார்ப்பது எவ்வளவோ புண்ணியமும் புகழுமாம். ஆனதால் தொண்டைமான் குலத்தவர்களே! இந்த முதல் விக்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட நற்கைங்கிரியங்களை அநுட்டிக்கவழிபாருங்கள். உங்களுடன் உடன் நின்று உழைக்க கங்கணம்கட்டிக்கொண்டிருப்பவர் பலருண்டு. நீங்கள் முன்வாருங்கள். ஒவ்வொருவரும் நான்முந்தி நீமுந்தி என்று போட்டிபோட்டுக்கொண்டு உழைப்பெடுங்கள்.

சுபம்.

456.T.2147
N

தொண்டைமான் சங்கத்தார்,

திருநெல்வேலி.

22348

	,,	மூ. சுடலையாண்டிதொண்டை	,,	0—4—0
	,,	முத்துதொண்டைமான்	,,	0—4—0
கல்லிடைக்குறிச்சி	,,	ந. சுந்தரம்தொண்டைமான்	,,	1—0—0
ஸ்ரீவைகுண்டம்	,,	பலவேசம்தொண்டைமான்	,,	0—4—0
	,,	பாலய்யாதொண்டைமான்	,,	0—4—0
	,,	சுப்புதொண்டைமான்	,,	0—4—0
	,,	ஈனமுத்துதொண்டைமான்	,,	0—4—0
	,,	சுடலையாண்டிதொண்டைமான்	,,	0—4—0
	,,	போ. ஈனமுத்துதொண்டைமா	,,	0—4—0
	,,	தி. பிச்சக்காரன்தொண்டைமா	,,	0—4—0
	,,	பெரியசுவாமிதொண்டைமான்	,,	0—4—0
ஆழ்வார்திருநகரி	,,	அ. பழனிதொண்டைமான்	,,	0—4—0
	,,	அ. மாடசுவாமிதொண்டைமான்	,,	0—4—0
	,,	...யனதொண்டைமான்	,,	0—4—0
	,,	பூ. பழனிதொண்டைமான்	,,	0—4—0
	,,	அ. ஐயம்பெருமாள்தொண்டை	,,	0—4—0
	,,	பலவேசம்தொண்டைமான்	,,	0—4—0
ஏறல்	,,	வண்ணமுத்துதொண்டமான்	,,	0—4—0
	,,	பகவதிதொண்டைமான்	,,	0—4—0
	,,	தி, சுடலையாண்டிதொண்டை	,,	0—4...6
	,,	சு. சப்பாணிதொண்டைமான்	,,	0—4—0
	,,	பா. மூக்கன்தொண்டைமான்	,,	0—4—0
	,,	தி. ராமசுவாமிதொண்டைமான்	,,	0—4—0
	,,	ஆறுமுகம்தொண்டைமான்	,,	0—4—0
	,,	அ, மாடசுவாமிதொண்டமான்	,,	0—4—7
	,,	சு. ராமசுவாமித்தொண்டமான்	,,	0—4—0
சங்கரன் கோவில்	,,	மூ, சாமிநாதன்தொண்டமான்	,,	0—4—0
ஆறுமுகநேரி	,,	சுடலையாண்டிதொண்டைமான்	,,	0—4—0
	,,	சுப்பையாதொண்டைமான்	,,	0—4—0
	,,	சிவனு தொண்டைமான்	,,	0—4—0
நல்லூர்	,,	பேச்சிமுத்துதொண்டைமான்	,,	0—4—0
	,,	சாமி தொண்டைமான்	,,	0—4—0

வல்லநாடு	,,	பழனி தொண்டைமான்	,,	0—4—0
	,,	சுப்பையா தொண்டைமான்	,,	0—4—0
	,,	ஆ. சுடலைமுத்து தொண்டைமான்	,,	0—4—0
	,,	நாராயணன் தொண்டைமான்	,,	0—4—0
ஆத்தூர்	,,	ரா. சுடலையாண்டி தொண்டை	,,	0—4—0
	,,	சுப்பையா தொண்டைமான்	,,	0—4—0
	,,	மாடசுவாமி தொண்டைமான்.	,,	0—4—0
சாத்தூர்	,,	அ. பேச்சிமுத்து தொண்டைமான்	,,	0—4—0
கடம்பூர்	,,	அருணகிரி தொண்டைமான்	,,	0—8—0
பெருங்குளம்	,,	சுடலையாண்டி தொண்டைமான்	,,	0—4—0
	,,	வா. சுடலைமுத்து தொண்டைமான்	,,	0—4—0
பொதியம்புத்தூர்		வ. முனியாண்டி தொண்டைமான்	,,	0—4—0
செவந்தை	,,	ம. சங்கரலிங்கம் தொண்டைமான்	,,	0—4—0
முக்காணி	,,	முத்துலிங்கம் தொண்டைமான	,,	0—4—0
	,,	சொ சொறிமுத்து தொண்டை	,,	0—4—0
தென்திருபேரை	,,	ஐயம்பெருமாள் தொண்டைமான்	,,	0—4—0
	,,	பிச்சக்காரன் தொண்டைமான்	,,	0—4—
திம்மலாசபுரம்	,,	மாடசாமி தொண்டைமான்	,,	0—4—
கொங்கலா குறிச்சி	,,	முத்துமாலை தொண்டைமான்	,,	0—4—
குறிச்சி	,,	கருப்பசுவாமி தொண்டைமான்	,,	0—4—0
	,,	சங்கரலிங்கம் தொண்டைமான்	,,	0—4—0

யூனியன் சென்ட்ரல் பிரஸ், வடக்குரதவீதி, திருநெல்வேலி.